பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 12 2024 6 45

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. அரசியல் சாசனம் என்பது வெறும் ஆவணம் மட்டுமல்ல மக்கள் நலனுக்கான அடிப்படை ஆதாரம் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த பத்து ஆண்டுகளில ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் திறமை வாய்ந்த செஸ் வீரர் வீராங்கனைகளை உருவாக்க சிறப்பு அகாடமி உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் இம்மாதம் 30-ஆம் தேதி தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஐந்தாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் 260 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அரசியல் சாசனம் என்பது வெறும் ஆவணம் மட்டுமல்ல மக்கள் நலனுக்கான அடிப்படை ஆதாரம் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அரசயில் சாசன சட்டத்தின் 75-வது ஆண்டையொட்டி நாடாளுமன்ற மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய அவர், நாட்டின் ஜனநாயக வேர்களை வலுப்படுத்துவது அரசியல் சாசனம் என்று கூறினார்.

ஏழை மக்களின் நலனுக்கான திட்டங்களை வகுக்கவும், நாட்டை கட்டமைப்பதிலும் அரசியல் சாசனத்தின் பங்கு முக்கியமானது என்று அவர் தெரிவித்தார்.

பேச்சு சுதந்திரத்தை தடுப்பதற்கான முதலாவது அரசியல் சட்டத்திருத்தம் காங்கிரஸ் ஆட்சியின்போது கொண்டு வரப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், இதுபோன்ற பல்வேறு சட்டத்திருத்தங்களை அக்கட்சி கொண்டு வந்திருப்பதாகக் குறை கூறினார்.

கடந்த 16 ஆண்டுகளில் பிஜேபி ஆட்சியின்போது 22 முறை சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட நிலையில் ஐந்து ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் 77 சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக திரு அமித்ஷா தெரிவித்தார்.

தேர்தல் தோல்விக்கு பயந்து மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களின் பதவிக்காலத்தை அதிகரிப்பதற்கான சட்டத்திருத்தத்தையும் காங்கிரஸ் கொண்டு வந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.,

ஆனால் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு ஜி எஸ் டி-யை அமல்படுத்தியது,. பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்குவது, பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு பத்து சதவீது இடஒதுக்கீடு போன்றவற்றுக்காக சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக திரு அமித்ஷா பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய அவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா, நாட்டு மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கக்கூடிய ஜனநாயக சுதந்திரம் வழங்கும் வகையிலான சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தி இருப்பதாகக் கூறினார்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் அரசியல் சாசன சட்டம் சிதைக்கப்பட்டதாக திரு ஜெ பி நட்டா குற்றம்சாட்டினார்.

முன்னாள் பிரதமர் திரு எச் டி தேவேகவுடா, திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் திரு சுஷ்மிதா தேவ், திமுக-வின் திரு வில்சன், ஆகியோரும் இந்த விவாதத்தில் பங்கேற்று பேசினர்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் பொதுத்துறை நிறுவனங்கள் உலக தரத்திலான தொழில்நுட்பங்களை வழங்கக்கூடிய வகையில் நவீனப்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர்திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புத்துறை ஆலோசனைக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

பாதுகாப்புத்துறையில் புதிய பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் செல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்பு தளவாட உற்பத்தித்துறையில் இந்தியா சுயசார்பை எட்டுவதற்கு இந்த நிறுவனங்களின் நவீனத்துவம் அவசியம் என்று திரு ராஜ்நாத்சிங் அப்போது தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

விவசாயிகளின் நலனுக்காக கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசின் வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று இதனை தெரிவித்த அவர், நடப்பு ஆண்டில் வேளாண் துறைக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதார நிதி, வேளாண் கட்டமைப்பு நிதி, பயிர் காப்பீடு போன்ற திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படுவதாக திரு ராம்நாத் தாக்கூர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் திறமை வாய்ந்த செஸ் வீரர் வீராங்கனைகளை உருவாக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் சிறப்பு அகாடமி உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற போட்டியில் உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு சென்னையில் நேற்று தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற பாரட்டு விழாவில் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய்க்கான பரிசுத்தொகையை முதலமைச்சர் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், தமிழகத்தில் விளையாட்டுத் துறைக்கு அளிக்கப்பட்டு வரும் திட்டங்களை அவர் எடுத்துரைத்தார்.

44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை சென்னையில் நடத்தியது, மகளிர் டென்னிஸ் சாம்பியன், ஸ்குவாஷ் உலகக்கோப்பை போன்ற சர்வதேச போட்டிகளை நடத்தியதன் மூலம் தமிழகம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

குகேஷின் இந்த சாதனையை பின்பற்றி இளைஞர்கள் செஸ் போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

*<u>( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -50---- செகண்ட்</u>*

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், முன்னாள் செஸ் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் இம்மாதம் 30-ஆம் தேதி தொடங்க இருப்பதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இத்திட்டம் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், மகளிர் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்வதற்காக புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறினார்.

மருத்துவர்கள், பொறியாளர்கள், அறிவியல் வல்லுநர்கள் என கல்வி அறிவு நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழக அரசு இந்த திட்டத்தை நிறைவேற்றி வருவதாக திருமதி கீதாஜீவன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ள நிவாரண நிதியை மாநில அரசு உயர்த்தி வழங்க வேண்டுமென்று பாமக கௌரவத் தலைவர் திரு ஜி கே மணி கேட்டுக் கொண்டுள்ளார்.,

காஞ்சிபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக அரசு அறிவித்துள்ள இரண்டாயிரம் ரூபாய் நிவாரண உதவி போதுமானது அல்ல என்று கூறினார்.

விழுப்புரம்,. கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்திருப்பதுடன், ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிர்களும் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக திரு ஜி கே மணி தெரிவித்தார்.

[]<<<>>>[]

காஸாவில் நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை தீவிரமாக நடைபெற்று வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

இந்தியா உட்பட 39 நாடுகள் இலங்கைக்கு விசா இல்லாமல் பயணம் செய்யலாம் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு விஜிதா கெராத் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கும் வகையிலான இந்தியா – நேபாள் ஸ்டார்ட்-அப் மாநாடு காத்மாண்டுவில் நேற்று தொடங்கியது.

[]<<<>>>[]

புதுதில்லியில் வரும் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள 69-வது ரயில்வே வார விருது வழங்கும் விழாவில் தெற்கு ரயில்வேயைச் சேர்ந்த எட்டு ஊழியர்கள் விருது பெறுகின்றனர்.

[]<<<>>>[]

தில்லி பவானா தொழில்பேட்டைப் பகுதியில் தொழிற்சாலை ஒன்றில நேற்று நேரிட்ட தீ விபத்தில் ஆறு பேர் காயமடைந்தனர்.

[]<<<>>>[]

தலைநகர் தில்லியில் காற்றின் தரம் நேற்று இரவு மிக மோசமான நிலையை கட்டியது. தரக்குறியீடு 432-ஆக பதிவானதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

திமுக தலைமை செயற்குழுக் கூட்டம் வரும் 22-ஆம் தேதி நடைபெறும் அக்கட்சி அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புயல் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஊத்தங்கரை, போச்சம்பள்ளி,. மாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு சி ஆர் பி எப் கமாண்டோ குழுவினர் நேற்று நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

[]<<<>>>[]

கேரளாவிலிருந்து ஏற்றி வந்த மருத்துவக் கழிவுகளை நெல்லை மாவட்டத்தில் கொட்டப்பட்டதை அடுத்து, தமிழக – கேரள எல்லைப்பகுதியான தென்காசி மாவட்டம் புளியரை சோதனைச் சாவடியில் தீவிர சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் சிறப்பு முகாமில் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்விமோகன் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்டம் வேதாளை அருகே இலங்கைக்கு கடத்தவிருந்த பதப்படுத்தப்பட்ட 450 கிலோ கடல் அட்டைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஐந்தாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் 260 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்க இருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445 ரன்

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கு எதிரான மகளிர் இரணடாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.